ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1998/6 - 2016 දෙසැම්බර් මස 20 වැනි අඟහරුවාදා - 2016.12.20

*1998/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

**மதுவரி அறிவித்தல் இல. 993**

**போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளு மீதான வரி**

காலத்துக்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், 2017, சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில்,

(அ) இலங்கையில் தாபிக்கப்பட்டு உருமம் வழங்கப்பட்டுள்ள ஏதேனும உற்பத்திச் சாலையொன்றில் உற்பத்தி செய்யப்பட்டு போத்தலில் அடைக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்ற கள்ளு லீட்டர் ஒன்றுக்கு ரூபா 50/= என்ற வீதத்தில் தீர்வையொன்று அறவிடப்படுதல் வேண்டுமெனவும்,

எவ்வாறாயினும், போத்தலில் அடைக்கப்பட்டு இலங்கைத் தீவிற்கு ; வெளியே ஏற்றுமதி செய்யப்படுகின்ற கள்ளின் எத்தகைய அளவு தொடர்பிலும் வரித் தீர்வை அறவிடப்படலாகாது எனவும் ;

(ஆ) 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிய 1947/43 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 987 இனை இத்தால் இரத்துச் செய்கின்றது எனவும்,

இக்கட்டளை மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01,
2016, திசெம்பர் 19.

1- 86



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.